புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் பொன்னமராவதி ஆலவயலில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார், நிகழ்வுகளில் தலைமைக் கழகப் பேச்சாளர் பவானி கண்ணன், பொன்னமராவதி தெற்கு ஒன்றியச் செயலாளர் அ.அடைக்கலமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இளையராஜா, ஒன்றிய அவைத்தலைவர் ராமு, ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி, ஆலவயல் மிராஸ் பெரி. அழகப்பன் அம்பலம், மாவட்ட விளையாட்டு துறை அணி துணை அமைப்பாளர் ஆலவயல் சாமிநாதன், திருமயம் தொகுதி வலைதள பொறுப்பாளர் ஆலவயல் முரளி சுப்பையா, மாவட்ட கவுன்சிலர் மணிகண்டன், மாவட்டப் பிரதிநிதி ராமையா மற்றும் ஆலவயல் கிளை கழக உடன்பிறப்புகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சி வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக

கடந்த 2 ஆண்டுகளில் ரூ.884 கோடி வழங்கியுள்ளார் முதல்வர்!

தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள் வழங்கி - அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

சேலம், ஜூலை 18-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சேலம் மாநகராட்சி வளர்ச்சித் திட்டப்பணிகளுக்காக கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் ரூ.884 கோடி வழங்கி உள்ளார் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சேலம் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசும்போது குறிப்பிட்டார்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (16.07.2023) சேலம் மாநகராட்சி, தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியின் வாயிலாக தூய்மைப்பணியாளர்களின் குழந்தைகளை பெரிய அளவில் தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்காக டெல்லியில் உள்ள தொழில் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் தூய்மை பணியாளர்களின் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, ஒரு திட்டத்தை செயல்படுத்தி உள்ளார். தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினரின் நிலை மென்மேலும் உயர வேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டு வருகிறார்.

மேலும், தூய்மைப்பணியாளர்களுக்கு நிலுவையில் இருந்த சம்பள தொகை மற்றும் ஓய்வுப்பெற்ற பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை கடந்த மாதம் ரூ.3.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதனால் தூய்மைப்பணியாளர்களுக்கு உரிய தொகையை உரிய நேரத்தில் கொடுக்கும் நிலை தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டு உள்ளது.

சேலம் மாநகராட்சி வளர்ச்சித்திட்டப்பணிகளுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.884 கோடி வழங்கி உள்ளார். இதில் சாலை வசதிக்காக மட்டும் ரூ.103 கோடி ரூபாய் வழங்கப்பட்டு உள்ளது. ரூ.548 கோடி மதிப்பிலான பாதாள சாக்கடை திட்டத்திற்கு விரைவில் பணிகள் துவங்கப்படும். கடந்த காலங்களில், இருப்பதை போன்று இல்லாமல், பாதாள சாக்கடை திட்டத்துடன் சாலை வசதிகள், கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிகளும் நடைபெறும் வகையில் திட்டம் தீட்டப்பட்டு உள்ளது. தூய்மைப் பணியாளர்களுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கையும் நிச்சயம் மேற்கொள்ளப்படும்.

தூய்மைப் பணியாளர்களுக்குதூய்மைப்பணியாளர் நலவாரிய அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தில் அடையாள அட்டை, கழிவுநீர் அகற்றும் வாகனங்களை இயக்குபவர்களுக்கு உரிமம், தூய்மைப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடப்பொருட்கள், பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கான கணினி உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டுள்ளது. நான் தொழில்துறை அமைச்சராக இருந்தபோது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18 வாரியங்களை தொடங்கி வைத்தார்கள். இந்த வாரியத்தின் உறுப்பினர்கள் கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை என்று வாரியத்தின் மூலம் ஏராளமான நலத்திட்ட உதவிகள் வழங்க வாய்ப்பாக அமைந்தது.

நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள தூய்மைப் பணியாளர்கள் மாதந்தோறும் நல வாரியத்திற்கு ஒரு சிறு தொகையை செலுத்தினால், தமிழ்நாடு அரசு தூய்மைப் பணியாளர்களுக்கு இறுதியாக அதனை முழுத் தொகையாக அவர்களுக்கு வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்துள்ளேன். சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான அளவு நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

இதனைத் தொடர்ந்து, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் நியாய விலைக் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த திருமதி. ஆர்.தனலட்சுமி என்பவரின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25 இலட்சத்துக்கான காசோலையினை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல்மங்கை, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாநகர நகர்நல அலுவலர் மரு. யோகானந்த், மண்டலக்குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சிப் பணியாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சி தெற்கு மாவட்டத்தில்

மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில்!

திருச்சி, ஜூலை 18-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் சுயேச்சை மாமன்ற உறுப்பினர் தன்னைக் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், திருச்சி மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன் மற்றும் பகுதி கழகச் செயலாளர் ஆர்.ஜி.பாபு வரவேற்பில், திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் திருச்சி ராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 20 சார்ந்த சுயேச்சை மாமன்ற உறுப்பினரும் தே.மு.தி.க. மாவட்ட கழகத் துணைச் செயலாளருமான, எல்.ஐ.சி. சங்கர் மற்றும் 50 க்கும் மேற்பட்டவர்கள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், பொதுக் குழு உறுப்பினர் ராஜேஷ் வரன், மற்றும் வட்ட கழக செயலாளர்கள் சுருளி ராஜன், செந்தில், மாவட்ட அமைப்பாளர் ஏ.ஜே. மகேஷ் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தாராபுரம் சின்னகடை வீதியில் உள்ள என்.கே.1114 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் ஆவின் பாலகத்தை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், தாராபுரம் நகரக் கழக செயலாளர் பொறியாளர் எஸ். முருகானந்தம், தாராபுரம் நகர்மன்றத் தலைவர், பொறியாளர் கு.பாப்புகண்ணன் உள்பட மாவட்ட, நகர, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், பச்சாபாளையத்திலுள்ள கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகத்தில் பால் வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆய்வு மேற்கொண்டார் அருகில் பால்வளத்துறை இயக்குநர் டாக்டர். எஸ். வினித், ஆவின் பொது மேலாளர் மரு.ப.பாலபூபதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.

சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் 218வது நினைவு நாள்!

அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மரியாதை!

ஈரோடு, ஜூலை 18-

சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் 218வது நினைவு நாளையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் மரியாதை செலுத்தப்பட்டது.

சுதந்திர போராட்ட வீரர் தியாகி பொல்லான் அவர்களின் 218வது நினைவு நாளையொட்டி பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு வீட்டு வசதி துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மது விலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எம். கந்தசாமி, வி.சி.சந்திரகுமார், கே.இ.பிரகாஷ், வீரமணி, மாவட்ட நிர்வாகிகள் குமார் முருகேசன், ஆ.செந்தில்குமார், செல்ல பொன்னி, க.சின்னையன், ப.க பழனிசாமி, ப.மணிராசு, ஆர்.பொன்னுச்சாமி, மாநகர திமுக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாநகர நிர்வாகிகள் இரா. சேகரன், கே.சந்திர சேகர், ஜி.சண்முகம், சி. மணி

பகுதி செயலாளர்கள் துணை மேயர் வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், அக்னிச்சந்துரு, பொ.ராமச்சந்திரன், வில்லரசம்பட்டி முருகேசன், சென்னிமலை ஒன்றியச் செயலாளர் செங்கோட்டையன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் யு.மாதையன், நாகரத்தினம், சுள்ளான் எஸ். ராஜேந்திரன், ராவணன், வழக்கறிஞர் மா.சு.ராதாகிருஷ்ணன், ஆறுமுகம் இளைஞரணி நிர்வாகிகள் நித்தின், ரகு, விஜயராஜன், சேந்தன் புகழ், சீனிவாசன், பார்த்திபன், நவீன், திண்டல் அறங்காவல் குழு தலைவர் வேலுச்சாமி, ஆதி திராவிடர் நல குழு நிர்வாகிகள் கே.சென்னியப்பன் சுரேஷ், கதிரவன், எஸ்.சென்னியப்பன், ரவி, ஜி.ராஜேந்திரன், கே.குமார், எல்.பி.எப்.கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் ஒன்றியம் சாமளாபுரம் பேரூராட்சி பகுதிகளில்

ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜூலை 18 -

திருப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட இடுவாய் மற்றும் மங்கலம் ஊராட்சி, சாமளாபுரம் பேரூராட்சி பகுதிகளில் ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டுப் பணி, வடிகால் வசதி, கீழ் மட்ட தொட்டி ஆகிய பணிளைத் துவக்கி வைத்து, ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்

திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி சீரங்க கவுண்டன் பாளையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டடத்தை திறந்து வைத்தும், மங்கலம் ஊராட்சி காந்தி நகரில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி மற்றும் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும், மங்கலம் ஊராட்சி, கணபதிபாளையம் பிரிவு, ஆர்.பி நகரில் முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.73.39 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் சோமனூர் சாலை முதல் செட்டிபாளையம் செல்லும் சாலை வரையிலும், இடுவாய் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.37.94 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணி, சாமளாபுரம் பேரூராட்சியில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை, கீழ் மட்ட தொட்டி மற்றும் வடிகால் வசதி உள்ளிட்ட 6 திட்டப்பணிகள் துவக்கி என மொத்தம் ரூ.2.68 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தும், முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மதுமிதா, திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், ஒன்றிய செயலாளர்கள் என்.விஸ்வநாதன் திருப்பூர் வடக்கு, பி.விஸ்வலிங்கசாமி திருப்பூர் தெற்கு, சாமளாபுரம் பேரூர் கழக செயலாளர் பி.வேலுச்சாமி, திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோதிலிங்கம், உதவி பொறியாளர் கற்பகம், இடுவாய் ஊராட்சி மன்றத்தலைவர் கணேசன், மங்களம் ஊராட்சி மன்றத்தலைவர் எஸ்.எம்.பி.மூர்த்தி, சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி, துணைத் தலைவர் குட்டி வரதராஜன், திருப்பூர் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் சகாபுதீன், ரவி, திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முகமது ஜுனைத், சசிகுமார், மாவட்ட பிரதிநிதிகள் சுந்தரவடிவேல், ஹைடெக் ரவி, திருப்பூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சரவணகுமார், மாணவரணி அமைப்பாளர் முகமது இத்ரீஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முகமது உசேன் சரவணகுமார், மங்களம் கிளைச் செயலாளர் மூணூர் பாபு உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழகத் துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முதன்மை முதல்வரின் அறிவுப் புரட்சி- கலைஞர் நூலகம்!

உலகளாவிய மக்களின் கண்களைத்
- திறக்கும் வாழ்வியலை
உறவாக்கிச் சிந்திக்க வைக்கும் கருவூலமாய்
நலமுறவே தமிழ்நாட்டு மக்களின்
இதயத்தைத் - தெளிவாக்கியே
நன்னூற்கள் திறவுகோல் அகத்தொளி
பிறப்பிப்பதாய்
நிலத்தமிழ்நம் மொழியினம் மீட்டெடுத்த
தளபதியார் - கலைஞருக்கே
நிகரில்லா அறிவுப்புரட்சி திராவிட
மாதிரி ஆக்கிப்புலனறி இயக்கம் கலைஞர் நூலகம்
மாமதுரை - கண்டனரே
போற்றுதுமே காலம் வென்று தலை
முறைகள் நிலைபெறுமே

பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்
உலக அமைப்பாளர்
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி குன்னூர் நகரக் கழக சார்பில் நல உதவிகளை மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்கினார். உடன் நகரச் செயலாளர் இராமசாமி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.